செ.வெ.எண்: 310 நாள்: 14.4.2020

**கட்டுமான நலவாரியத் தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத் தொழிலாளர்களுக்கு கொரோனா நிவாரண உதவித் தொகை மற்றும் ரேசன் பொருட்கள் நியாய விலைக் கடைகளில் விலையின்றி வழங்கப்பட்டு வருகிறது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

கட்டுமான நலவாரியத் தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத் தொழிலாளர்களுக்கு கொரோனா நிவாரண உதவித் தொகை மற்றும் ரேசன் பொருட்கள் நியாய விலைக் கடைகளில் விலையின்றி வழங்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் அமைப்பு சாரா ஓட்டுநர்கள் நல வாரிய உறுப்பினர்கள் ரேஷன் கடைகள் மூலமாக சிறப்பு நிவாரண உணவுத் தொகுப்பினைப் பெறலாம். தமிழகத்தில் மேற்கண்ட நலவாரியங்களில் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு அரிசி 15 கிலோ, துவரம் பருப்பு 1 கிலோ மற்றும் சமையல் எண்ணெய் 1 கிலோ ஆகியவை சிறப்பு நிவாரண உணவுத் தொகுப்பாக வழங்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்கள்.

இந்த சிறப்பு நிவாரண உணவுத் தொகுப்பு சம்பந்தப்பட்ட பகுதியிலுள்ள ரேஷன் கடைகள் மூலமாக வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் பதிவு செய்துள்ள தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் அமைப்பு சாரா ஓட்டுநர்கள் நல வாரிய உறுப்பினர்கள் தங்களது நல வாரிய அட்டை அல்லது நல வாரிய ஓய்வூதிய விவரம், குடும்ப அட்டை, ஸ்மார்ட் கார்டு, ஆதார் அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றினை தங்கள் பகுதி ரேஷன் கடைகளில் பொருள் வழங்குபவர்களிடம் நேரில் காண்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

சிறப்பு நிவாரண உணவுத் தொகுப்பினை தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினரே நேரில் வந்து பெற்றுச் செல்ல வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேற்கண்ட நல வாாரியத்தில் பதிவு செய்து இதுநாள் வரை ஆதார் எண், குடும்ப அட்டை, ஸ்மார்ட் கார்டு மற்றும் வங்கிக் கணக்கு எண் இணைக்கத் தவறிய தொழிலாளர்கள் , புதுக்கோட்டை மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அலுவலக தொலைபேசி எண் 04322 225675 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் வாட்ஸ்அப் எண் 9600266778 அல்லது losspudukottai@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு விவரங்களை அனுப்ப வேண்டும்.

தற்பொழுது தடை உத்தரவு உள்ள நிலையில் தொழிலாளர்கள் அதிகம் கூடுவதைத் தவிர்க்கும் வகையில் சமூக இடைவெளியை பேணும் பொருட்டு இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, தொழிலாளர்கள் இவ்வசதியை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இது தொடர்பாக யாரும் அலுவலகத்திற்கு நேரில் வர வேண்டியதில்லை. புதுக்கோட்டை மாவட்டத்தில் கட்டுமான நல வாரியத் தொழிலாளர்கள் அமைப்பு சாரா ஓட்டுநர்கள் மற்றும் நல வாரியத் தொழிலாளர்களது வங்கி கணக்கில் கொரோனா வைரஸ் நிவாரண உதவித் தொகை ரூ.1,000 வரவு வைக்கப்பட்டு வருகிறது. 13.04.2020 முதல் தொடர்புடைய நியாய விலைக்கடைகளில் பொது விநியோகத் திட்ட அத்தியாவசிய பொருட்கள் விலையின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

ஆகவே, தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள அனைத்து நிலை தொழிலாளர்களும் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நியாய விலைக் கடைகளில் நேரில் சென்று பொதுவிநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்களை விலையின்றி பெற்று பயனடையலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**